www.tamilarangam.net




# கம்பன்

இலக்கிய இலக்கணத் திங்களிதழ்

திருவள்ளுவர் ஆண்டு உ0நந-விடை-க (15-05-2002)

ஆசிரியர்

கவிஞர் கி. பாரதிதாசன்




## இரவீந்திரநாத் தாகூர்

***************************

எங்கள் தந்தை பெரியார்போல்
எதற்கும் அஞ்சா(து) இருந்தனையே!
மங்கும் எளியோர் வாழ்க்கையினை
மகிழும் வண்ணம் உயர்த்தினையே!
பொங்கும் புதுமைக் கருத்தினையும்
பூந்தேன் பொழியும் அன்பினையும்
வங்க மொழியில் நூலாக
வடித்துப் புகழைப் பெற்றனையே!

- இலக்குவன்

(06/05/1861 - 07/08/1941)

கம்பன் கழகம், பிரான்சு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# கம்பன்

இலக்கண இலக்கியத் திங்களிதழ்

ஆண்டு-உ திங்கள்-ரு





**"யாரொடும் பகை கொள்ளலன் என்ற பின் போர் ஒடுங்கும், புகழ் ஒடுங்காது"**

**ஆசிரியர்**

**கவிஞர் கி. பாரதிதாசன்**

*****

**கம்பன் குழுவினர்**

**நந்தா தாமோதரன், இரவிச்சந்திரன், கிரிதரன், சின்னையாகோபாலபிள்ளை, மோரோ நடராசன்**

*****

**வெளியீடு**

**கம்பன் கழகம்**
**பிரஞ்சு தமிழ் ஆய்வுக் கழகம்**
**பிரான்சு**

*****

**அஞ்சல் தொடர்புகளுக்கு**



**Poète K. BHARATHIDASAN**
6 RUE PAUL LANGEVIN
95140 - GARGES LES GONESSE
FRANCE
Tél: 01 39 86 86 53
**E-mall:**
**bharathidasan @ wanadoo. fr**



*****************

வருகின்ற படைப்புகளைச் சுருக்கவும், திருத்தவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு. படைப்புகள் நல்லதமிழில் அமைதல் வேண்டும்.


# மொழியும் நாடும்!

****************************

(தொடர்ச்சி)

கனியிடை ஏறிய சுளையும் - முற்றல்
கழையிடை ஏறிய சாறும்,
பனிமலர் ஏறிய தேனும் - காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்
நனிபசு பொழியும் பாலும் - தென்னை
நல்கிய குளிரிள நீரும்
இனியன என்பேன் எனினும் - தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்!

உலகில் தோன்றி மொழிகளிலே மிகவும் இனிமையுடையதும், இன்பம் படைப்பதும் தமிழேயாகும். தமிழ்ப் புலவர்களும், தமிழ்ச் சான்றோர்களும் தமிழ் மொழியை உயிராக எண்ணிப் போற்றுவதின் காரணம் என்ன? உடலில் உயிர் இருக்கின்ற வரை இவ்வுடல் இயங்குகிறது. உயிர் பிரிந்துவிட்டால் இயக்கம் நின்றுவிடுகிறது. இச்செயல்போல் ஓர் இனத்தின் மொழி இருக்கின்ற வரைதான் அவ்வினம் இருக்கும் இனத்தின் மொழி அழிந்துவிட்டால் இனமும் அழிந்துவிடும் என்பதை உணருதல் வேண்டும்.

இத்தொடர் கட்டுரையைப் படித்த அன்பர் பலர் பாராட்டினார்கள். தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தார்கள். நண்பர் ஒருவர் இக்கட்டுரைக்கு மறுப்புத் தெரிவித்தார். பிரான்சில் வளரும் பிள்ளைகளுக்கு ஏன் தமிழ் கற்றுத் தர வேண்டும். அவர்கள் பிரஞ்சு மொழி மட்டும் படித்தால் போதுமே என்று என்னிடம் வாதாடினார். நிறைய விளக்கங்களை யான் எடுத்துச் சொல்லியும் நண்பரின் உள்மனம் யான் சொல்லிய கருத்தை ஏற்றுக்கொண்டாலும் வெளியே ஒப்புக்கு மறுத்தே பேசினார்.

நண்பரின் பிள்ளைகளுக்குத் தமிழில் பேசவோ, எழுதவோ தெரியாதாம். நண்பர், தம் பிள்ளைகள் குழந்தையாக இருக்கும் போதே தமிழில் பேசக் கூடாதென்று வீட்டில் சட்டம் போட்டாராம். குழந்தைகள் தெரியாமல் தமிழில் பேசினால் நண்பரும் அவரின் மனைவியும் குழந்தைகளை அடிப்பார்களாம்.

உலகிலேயே தாய்மொழியைப் பேச வேண்டாம் என்று சொல்லுகின்ற இழிநிலை தமிழினத்திலே இப்பொழுது காணப்படுகிறது. பிள்ளைகளைத் தமிழ் பேசாமல் செய்ததும், அடித்ததும் நண்பர் அறியாமல் செய்த தவறாகும். நன்கு சிந்திக்காமல், மொழி வரலாற்றை அறியாமல் செய்த தவறாகும்.

நண்பரின் பிள்ளைகள் நன்றாகப் பிரஞ்சு பேசுகின்றனர். ஆனால் அவர்கள் தாய் நாட்டிற்குச் சென்றால் அங்குள்ள உறவினரிடம் பேச முடியாமல் தவிக்கின்றனர். பெற்றோர்கள் இந்நிலையை எண்ணுதல் வேண்டும்.

இருபது ஆண்டுகளுக்கு மேலாக இங்கு வாழ்கின்ற தமிழர்தம் பிள்ளைகள் பிரஞ்சு மொழியொடு ஐரோப்பிய மொழிகள் சிலவற்றை நன்றாகப் பேசுவதையும் எழுதுவதையும் காண்கிறேன்.

பிரஞ்சு மொழியொடு ஐரோப்பிய மொழிகளைக் கற்றுக் கொண்ட தமிழ்ப்பிள்ளைகள் தாய் மொழியாகிய தமிழைக் கற்றால் அறிவில் குன்றிவிடுவார்கள் என்று எண்ணுவது சரியோ? "ஒரு மொழி கற்றவன் ஒரு மனிதன், இரண்டு மொழி கற்றவன் இரண்டு மனிதருக்குச் சமமாவான் என்ற முதுமொழியை உணர்க.

முன்பு உலகெங்கும் அகதியாக வாழ்ந்த யூதர்கள், இன்று செல்வச் செழிப்போடு வாழ்கின்றனர். இதற்குக் காரணமாக யான் எண்ணுவது யூதர்தம் தாய்மொழிப் பற்றும், தாய் மொழி வழியாகக் கற்கும் கல்வியுமே.

பிரஞ்சு நாட்டில் தொழில் துறையில் சிறந்து விளங்கும் யூதர்கள், தங்கள் பிள்ளைகளுக்குத் தங்கள் தாய்மொழி வழியாகவே கல்வி அளிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(தொடரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தவறின்றித் தமிழ் எழுதுவோம்

***********************************************

**சரியன்று- சரி**

| சரியன்று | சரி |
|---|---|
| அகமடியர் | அகமுடையார் |
| அடமானம் | அடைமானம் |
| அடையார் ஆறு | அடையாறு |
| அணக்கட்டு | அணைக்கட்டு |
| அது அல்ல | அதுவன்று |
| அநுபவம் | அனுபவம் |
| அம்மா வந்தாள் | அம்மா வந்தார் |
| அரசினர் பள்ளி | அரசுப்பள்ளி |
| அரசினர் கல்லூரி | அரசுக்கல்லூரி |
| அரணாக் கயிறு | அரைக்கயிறு, |
| | அரைஞாண் |
| அருவடை | அறுவடை |
| அருவாமணை | அரிவாள்மணை |
| அருவெறுப்பு | அருவருப்பு |
| அருகாமையில் | அருகில் |
| அவள் சரிந்தாள் | அவள் சாய்ந்தாள் |
| அவாள் | அவர்கள் |
| அவுத்தான் | அவிழ்த்தான் |
| அவை அன்று | அவையல்ல |
| அவை வராது | அவை வாரா |
| அறுபத்தி ஐந்து | அறுபத்தைந்து |
| அறுவாமணை | அறுவாள்மணை |
| அனியாயம் | அநியாயம் |
| அன்னார் | அவர் |
| அனைத்திந்தியா | இந்தியா, முழு இந்தியா |
| ஆட்டுக்கெடை | ஆட்டுக்கிடை |
| ஆத்துக்கு | ஆற்றுக்கு |
| ஆத்துக்காரன் | ஆகத்துக்காரன் |
| ஆத்துக்காரி | ஆகத்துக்காரி |
| ஆப்பை | அகப்பை |
| ஆம்படையாள் | அகமுடையாள் |
| ஆம்படையான் | அகமுடையான் |
| ஆம்பள | ஆண்பிள்ளை |
| ஆயிரத்தி முப்பத்தி ஐந்து | ஆயிரத்து முப்பத்தைந்து |
| ஆலமரம் சரிந்தது | ஆலமரம் சாய்ந்தது |
| ஆலோசனைநடத்தினார் | ஆலோசித்தார் |
| ஆறு மணல் | ஆற்று மணல் |
| இடிச்சபுளி | இடித்தபுளி |
| இயக்குனர் | இயக்குநர் |
| இரங்கசாமி | அரங்கசாமி |
| இரங்கநாதன் | அரங்கநாதன் |
| இருபத்தி ஐந்து | இருபத்து ஐந்து |
| இருவத்து மூன்று | இருபத்து மூன்று |
| இளிச்சான் | இளித்தான் |
| இடது பக்கம் | இடப்பக்கம் |
| உண்டை | உருண்டை |
| உந்தன் | உன்றன் |
| உத்திரவு | உத்தரவு |
| உடமை | உடைமை |
| உருவாகுதல் | உருவாதல் |
| ஊரணி | ஊருணி |

*********************************************************************************

# பாரீசு நகரத்தின் நினைவுச் சின்னங்கள்

## தமிழியக்கன் கவிஞர் தேவகுமரன்

### பாரீசு நகரத்தின் பெயர்கள்

பாரீசு என்ற பெயர் PARISII அல்லது PARISIACUM ஆகிய சொற்களிலிருந்து வருகிறது. முன்பு பாரீசு நகரத்தின் பெயர்கள் LUTECE, LUCOTICIA ஆகும். யேசுநாதரின் காலத்தில் ரோம் அதிகாரிகள் பாரீசு நகரத்தை ஆண்டார்கள். அவர்கள் கட்டிய CLUNY இடத்தைக் இன்றும் நாம் காணலாம்.

### VILLE DES LUMIERES

பாரீசுக்கு ஒளியுள்ள நகரம் என்று பெயர். மன்னர் லூய்சு XIV அவர்கள் 1677 ஆம் ஆண்டு VERSAILLES நகரத்தைப் பிரான்சு நாட்டின் தலைமையாக மாற்றினார்.

பாரீசு நகரம் 17 ஆம் நூற்றாண்டில் சிறப்புடன் திகழ்ந்தது. 18 ஆம் நூற்றாண்டில் பாரீசில் அறிஞர்கள் விஞ்ஞானிகள் கவிஞர்கள் எழுத்தாளர்கள் தோன்றிப் பிரான்சு ஐரோப்பிய மக்களுக்கு முன்னேற்றச் சிந்தனையைப் படைத்தனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சமற்கிருதத்தில் தமிழ் இலக்கிய மரபுகள்

************************************

## சண்முகசுந்தரம்

பழங்கால சமற்கிருத இலக்கியங்களும், காளிதாசருக்குப் பிறகு எழுந்த சமற்கிருத இலக்கியங்களும் தரத்தில் வேறுபடுகின்றன இராமாயணம், மகாபாரதம், புத்த சரிதை போன்ற வட மொழி இலக்கியங்களில், சமஸ்கிருதம் பண்பட்ட மொழியாக இல்லை. காளிதாசரின் இலக்கியங்களிலிருந்துதான் (சகுந்தலை, குமார சம்பவம், மேகதூதம் போன்றவை) அம்மொழி வளம் பொருந்திய மொழியாகக் கருதப்படுகிறது. காளிதாசர் காலம் கி.பி. ஆறாம் நூற்றாண்டாக அறிஞர்களால் கொள்ளப்படுகிறது ஆனால் தமிழில் தொல்காப்பியம் என்ற இலக்கண நூல் கி.மு. 5 முதல் 3 ஆம் நூற்றாண்டிற்குள்ளும் சங்கப் பாடல்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, கி.பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளுக்குள் தோன்றியவை என அறிஞர்கள் கருதுகிறார்கள். சங்க நூல்களில் காணப்படும் உவமைகள் கவிமரபுகள் பல காளிதாசரின் இலக்கியங்களில் காணப் படுகின்றன. சமற்கிருதத்தில் காளிதாசருக்கு முன் இவ் விதமான கவிமரபுகள் காணப்படவில்லை. இந்நிலையில் சமற்கிருதம் எப்படிப் பண்பட்ட மொழியாக மாற்ற மடைந்தது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

தமிழ் இலக்கிய மரபுகள், (பாவினங்கள், எதுகை, மோனை போன்றவை) முதல் முறையாகச் சமற்கிருதத்தில் காளிதாசர் இலக்கியங்களிலிருந்து ஆரம்பமாகின்றன. அதற்கு முன் இவ்வகையான ஒற்றுமைகள் இல்லை. தமிழ்க் கவிதை மரபு நேரடியாகச் சமற்கிருதத்திற்கு வந்தது என்று கூறுவதற்குப் போதுமான ஆதாரங்கள் இல்லை. ஆனால் பிராகிருத மொழி இலக்கியமான சத்தசை வழியாகச் சமற்கிருதத்தில் நுழைந்தது என்று கூறுவது பொருத்தமாகும். சத்தசையில் சங்க காலப் பாடல்களில் காணப்படும் இலக்கிய மரபுகள் காணப்படுகின்றன. சத்தசையும் சங்க காலப்பாடல்களும் ஒரே காலத்தனவாதலின் இம்மரபுகள் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்குப் போய் இருக்க முடியாது. காரணம் தமிழும், பிராகிருதமும் அடுத்தடுத்த மாநிலங்களில் பேசப்பட்டவை. அவ்விரு மொழிகளும் பேசப்பட்ட மாநிலங்களுக்கிடையில் மராட்டிய மொழி மாநிலம் இருந்தது.

அதற்குக் கீழே திராவிட மொழிகளின் எல்லை ஆரம்பிக்கிறது. கி.பி. 2 ஆம் நூற்றாண்டுக்கு முன் தமிழ்நாட்டுக்கும், மகாராட்டிரத்துக்கும் கலைப் பண்பாட்டுத் தொடர்புகள் ஏற்படவில்லை. மேலும் சத்தசை பிராகிருத இலக்கிய வளர்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தமிழ் இலக்கிய மரபைப் பிராகிருதம் பின்பற்ற வாய்ப்பில்லை. மகாராட்டிரத்துக்குக் கீழே திராவிட மொழிகளின் மாநிலங்கள் இருப்பதால், தமிழும் மகாராட்டிரமும் ஏற்கனவே தென்னிந்தியாவில் பேச்சு வழக்கிலிருந்த ஒரு பொது மொழியிலிருந்து இம்மரபைப் பின்பற்றியிருக்கலாம். அதாவது ஆரியப் பண்பாடு நன்கு கலக்காத காலத்தில் இது ஏற்பட்டிருக்கலாம். மகாராட்டிரத்திலிருந்து இம்மரபைப் பிராகிருத மொழி பின்பற்றியிருக்கலாம்.

காலப்போக்கில் ஆரியப் பண்பாட்டுக் கலப்பினால் பிராகிருதத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டிருக்கலாம்.

திராவிட மரபுகளும் குறையத் தொடங்கியிருக்கலாம். அதனால்தான் சத்தசையில் சில தமிழ் மரபுகள் மட்டும் காணப்படுகின்றன. அதில் பெண்ணின் கற்புக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. பல பாடல்களில் மனைவி என்பவள் கற்பு நிலையிலிருந்து தவறியவளாகச் சித்தரிக்கப்படுகிறாள். இம்மாதிரியான சூழல்கள் சங்க இலக்கியங்களில் காணப்படவில்லை.

தமிழ் மொழி திராவிட வாய்மொழி கவிமரபை அப்படியே ஏற்றுக் கொள்ளவில்லை. பல மாறுதல்களைச் செய்திருக்கிறது. தமிழ் எழுத்து மொழியாக மாறிய போது ஒவ்வொரு சொல்லும் உருவகமும் பெருத்த மாற்றத்தை அடைகின்றது. எடுத்துக் காட்டாகத் தமிழ் இலக்கியத்தில் ஒவ்வொரு நிகழ்ச்சியும், இன்னின்ன நிலத்தில்தான் நடக்க வேண்டும் என்ற விதிமுறை ஏற்கனவே இருந்த திராவிட வாய்மொழி மரபிலிருந்து முற்றிலும் மாறுபாடுகிறது. இம்முறை "சத்திசையில்" காணப்படவில்லை. காரணம் இது திராவிட பொது மொழியில் இல்லாதிருக்கலாம். தமிழும் சில சமயங்களில் திணைமயக்கம் என்ற தலைப்பில் இவ்விதிகளை மீறுகிறது. எடுத்துக்காட்டாக ஐங்குறுநூறில் 120-128 ஆம் பாடல்களில் கதாநாயகனின் பரத்தை நிலத்துப் பாடல்களில் நெய்தல் நிலத்துக்குரிய காட்சிகளுடன் விவரிக்கப்படுகிறான். மாறாக நிலவுக் காலத்தில் பிரிதலும், இரவில் சந்திப்பதும், வாடுவதும், கோடை வெப்பத்தில் பயணம் செய்தலும் போன்ற இலக்கிய மரபுகள் திராவிடப் பொது மரபிலிருந்து பிராகிருதியிலும் சமற்கிருதத்திலும் வந்திருக்கலாம். தமிழ், பிராகிருதி மொழியைப் போல் பொதுத் திராவிட மரபிலிருந்து அதிகம் விலகிச் செல்லாமல் பெரும்பகுதியைத் தன்னகத்தே காப்பாற்றி வைத்திருக்கலாம்.

தமிழர்கள் மிகப் பழங்கால முதல் திருமணத்துக்கும் கற்புக்கும் முக்கியத்துவம் கொடுத்தனர் என்பதைச் சங்கப் பாடல்களால் அறியலாம். அவர்கள் காதல் தெய்வீகமானது என்று கருதினர். இது போன்ற கருத்துக்கள் சத்தசையில் இல்லை. பிற்காலத்தில் வட நாட்டிலிருந்து தமிழகத்துக்கு வந்த ஆரியர்கள் பல வடச் சொற்களையும், மதக் கருத்துக்களையும் தமிழர்களிடையே புகுத்தியிருந்தும் தமிழ் இலக்கிய மரபில் பெருத்த மாற்றங்கள் ஏற்படவில்லை. பழைய திராவிட மரபுகள் பெரும்பாலும் காப்பாற்றப் பட்டிருக்கின்றன. ஆனால் கி. பி. இரண்டாம் நூற்றாண்டில், மகாராட்டிரம் ஆரிய நாட்டின் எல்லையாக இருந்ததால், திராவிடக் கவிமரபும், பண்பாடும் மகாராட்டிர மொழியில் அதிகம் கலந்திருக்க வேண்டும். காலப்போக்கில் ஆரிய மொழிக் கலப்பினால் திராவிட மரபு அழிந்திருக்கலாம்.

காளிதாசரின் இலக்கியங்களிலும் அதற்குப் பின் வந்த இலக்கியங்களிலும் காணப்படும் புது இலக்கிய மரபுகள் முதலில் சத்தசையில்தான் காணப்படுகின்றன. இதிலிருந்து காளிதாசர் பிராகிருத மரபை அறிந்திருந்தார் என்று கொள்ளலாம். பெரும்பாலான பாடல்களில் அவர் அக்கால சமஸ்கிருதம் மற்றும் காவியங்களின் மாதிரிகளைத்தான் பின்பற்றி எழுதியிருக்கிறார். சத்தசையில் உள்ள மரபுகள் சில அவர் இலக்கியங்களில் காணப்படுவதால் அவர் அவைகளைப் பிராகிருத மரபிலிருந்து நேரடியாகவோ தனக்கு முன்பிருந்த புலவர்களின் இலக்கியங்களிலிருந்தோ எடுத்திருக்கலாம். எது எப்படி இருப்பினும் பல தமிழ் இலக்கிய மரபுகள் முதன் முதலில் காளிதாசரின் இலக்கியங்களிலிருந்தும் ஆரம்பிக்கின்றன சத்தசையில் இல்லாத மரபுகள் சமற்கிருதத்தில் மகாராட்டிர மொழி வழியாக வந்திருக்கலாம். காரணம் சத்தசையில் சுமார் 700 பாடல்கள்தான் சில குறிப்பிட்ட தலைப்புகளில் மட்டும் உள்ளன. அதில் எல்லா மரபுகளும் இருக்க வாய்ப்பில்லை. ஆனால் மகாராட்டிர மரபிலிருந்து வந்திருக்கலாம். சமற்கிருத இலக்கியங்களில் திராவிட மரபுகள் பல மாற்றிக் கையாளப் பட்டிருக்கின்றன.

திருமணம் புனிதமானது என்ற தமிழர் கொள்கை காளிதாசர் காலத்தில் வட இந்தியாவிலும் பரவிற்று இக்கொள்கையைக் காளிதாசரும் அதிக அளவில் பின்பிற்றி இலக்கியங்கள் படைத்தார் ஆனால் மற்றச் சமற்கிருதக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கவிஞர்கள் திருமணத்துக்குப் புனிதத்தன்மை கொடுக்க வில்லை. காரணம் தமிழர் ஒருவனுக்கு ஒருத்தி என்ற முறையைக் கையாண்டனர். ஆனால் ஆரிய முறையில் ஒருவனுக்குப் பல மனைவிகள் இருந்தனர். அதனால் ஆரிய இலக்கியங்களில் திருமணத்திற்குப் புனிதத்தன்மை கொடுக்கப் படவில்லை.

மேற்கூறிய ஒற்றுமைகளைத் தவிர வேறு சில ஒற்றுமைகளும் சத்தசைக்கு முன்பே சமற்கிருத இலக்கியங்களில் காணப்படுகின்றன. எடுத்துக் காட்டாக பெண்ணின் கண்களைக் குவளை மலர்களுக்கு ஒப்பிடுதல் இவ்வுவமைகள் மகாபாரதம், இராமாயணம், புத்த சரிதை ஆகிய நூல்களில் காணப்படுகின்றன. இராமாயணத்தில் சீதையின் கண்கள் குவளை மலரின் இதழ்களைப் போலிருந்தன என்று விவரிக்கப்படுகிறது. புத்த சரிதை 3.10 ஆம் பாடல்களில் கௌதமர் சென்ற வழியில் பெண்ணின் கண்களைப் போன்ற குவளைமலர்கள் இறைக்கப்பட்டிருந்தன என்றும் இராமாயணத்தில் இராமன் அயோத்திக்குள் நுழையும் போது பெண்கள் சன்னல் வழியாகச் சீதையின் வரவுக்காக ஏங்கி ஏங்கி அவர்கள் கண்கள் குவளை மலர்கள் போல் மாறிவிட்டன என்றும் வருகின்றன. இது போன்ற உவமைகள் சத்தசையில் 723 ஆம் பாடலிலும், காளிதாசரின் குமாரசம்பவப் பாடல்களிலும், மேகதூதம் 91 ஆம் பாடலிலும், சுபாசித ரத்ன கோசா 390, 409, 506, 1383 ஆம் பாடல்களிலும் காணப்படுகின்றன. இம் மாதிரியான உவமை ஐங்குறுநூறு 299 ஆம் பாடலிலும் வருகிறது (குன்ற நாடன் குன்றத்துக் கவா அன் பைஞ்சுனைப் பூத்த பகுவாய்க் குவளையும் . . .) அகநானூறு 10–27–149–150–188ம் பாடல்களிலும் குறந்தொகை 9–13–29–339 ஆம் பாடல்களிலும் இது போன்ற உவமைகளைக் காணலாம்.

மிருகங்கள் பற்றிய வருணனைகளிலும் தமிழிலக்கியங்களில் உள்ளது போன்ற உவமைகள் மகாபாரதம், இரகுவம்சம், சத்தசை ஆகியவற்றிலும் உள்ளன.

அகநானூறு 121 ஆம் பாடலில் ஒரு மான் பனைமரத்திலிருந்து காற்றசைவினால் ஏற்படும் ஒலியைத் தன் பெட்டையின் அழைகுரலாக எண்ணுகிறது. அகநானூறு 138 ஆம் பாடலில் நல்லபாம்பு ஒன்று தேனீயைப் பார்த்து விட்டு அதைத் தன் தலையிலிருந்து விழுந்த ஆபரணமாகக் (மாணிக்கமாக) கருதுகிறது. இவ்விதாமன உவமைகள் அகநானூற்றிலும், ஐங்குறு நூற்றிலும் குறுந்தொகையிலும் உள்ளன.

மகாபாரதத்தில் தேர் ஒலியைக் கேட்ட யானைகளும், மயில்களும் மேகத்தைக் கண்டது போல் வெகுண்டு கூச்சலிட்டன என்று வருகிறது. சத்தசை 531 ஆம் பாடலில் குரங்கு ஒன்று நாவல் பழத்தைத்தான் அடித்த தேனீயாக நினைத்துத் தின்னவில்லை. சத்தசை 532 640 551 ஆம் பாடல்களிலும் இரகுவம்சம் 13–32 ஆம் பாடலிலும் சுபாசித கோசரத்னா 157–199–409 பாடல்களிலும் இது போன்ற பலவிதமான உவமைகள் காணப்படுகின்றன.

முடிவுரை

மேலே கூறப்பட்ட ஒற்றுமைகளுக்கு மூன்று வகையான விளக்கங்கள் தரலாம்.

1. தமிழ் சமற்கிருதத்திலிருந்து கடன் வாங்கியிருக்கலாம்.

2. சமற்கிருத காவியங்கள் (இராமாயணம், மகாபாரதம் போன்றவை) தோன்றுவதற்கு முன்பே இவ்விதமான இலக்கிய மரபுகள் இந்தியா முழுவதும் பரவியிருந்திருக்கலாம்.

3. சமற்கிருதம் இம்மரபைக் காவியக் காலத்துக்கு முன்பே ஒரு தென்னிந்திய மரபிலிருந்து பின்பற்றியிருக்கலாம்.

இந்த மூவகை விளக்கங்களுள் முதலாவது முற்றிலும் பொருந்தாது. எட்டுத்தொகை பத்துப்பாட்டுக் காலங்களில் சமற்கிருத காவியங்களைத் தமிழர் அறிந்திருந்தனர் இதைக்கொண்டு தமிழ் வடநாட்டு உவமைகளைப் பின்பற்றியது என்று சொல்வதற்கில்லை முதலாவது இவ்வுவமைகள் தமிழ் இலக்கிய மரபுக்கு உரியனவாக எல்லா வகையிலும் பொருத்தமாக இருக்கின்றன. இரண்டாவது, தமிழில் அவைகள் (பூக்கள், மிருகங்கள் பற்றிய உவமைகள் விவரிக்கபடும் முறை வடநாட்டுக் காவிய முறையை விட மிகவும் வேறு பட்டிருக்கின்றன. மூன்றாவது இவ்விதமான உவமைகள் காவியங்களிலும், புத்த சரிதையிலும் தமிழில் உள்ளவைபோல் பரவலாகக் காணப்படவில்லை. கடைசியாகப் பூக்கள் பழங்காலந்தொட்டே தமிழரிடையே சிறப்பிடம் பெற்று, பல சடங்குகளிலும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் சமற்கிருத, காவியங்களில் அவை அந்த அளவிற்குச் சிறப்பிடம் பெறவில்லை. மிருகங்களைப் பற்றிய விவரங்களும் அவ்வாறே பழந்தமிழ்க் கவிஞர்கள் பறவை மிருகங்களின் காதல் உறவுகளையும் நன்கு மதித்துச் சித்தரித்துக் காட்டியிருக்கும் அளவுக்கு வடநாட்டுக் கவிஞர்கள் செய்யவில்லை. தமிழர் ஆண் பெண் உறவுக்குக் கொடுத்த மதிப்பைக் குறிப்பாகத் திருமணத்திற்குக் கொடுத்த புனிதத்தன்மையை ஆரிய இனத்தவர் கொடுக்கவில்லை. ஆகவே தமிழ் ஆரிய இலக்கியங்களிலிருந்து இவ்வித மரபுகளை எடுத்திருக்க முடியாது என்பது தெளிவாகிறது.

அடுத்துச் சமற்கிருத காவியக் காலத்தில் திராவிட சொற்கள் பண்பாடுகள் பாவினங்கள் ஆரிய இந்தியாவில் புக ஆரம்பித்தன என்பதை வரலாறு நமக்குக் கூறுகிறது. ஆனால் அவை புத்த சரிதையிலும, காவியங்களிலும் கையாளப் பட்டிருக்கும் முறை தமிழ் முறையிலிருந்து பெரிதும் மாறுபடுகின்றன. உவமைகள் தமிழில் உள்ளது போல் இலக்கியத் திறமையைக் காட்டுவது போல் இல்லை. இராமாயணமும், புத்தசரிதையும் எளிய நடையில் உள்ளதால் அவைகளுக்கு மெருகூட்டும் அடிப்படையில் இம்முறைகளைத் திராவிட முறையிலிருந்து எடுத்திருக்கலாம். தமிழிலிருந்து நேரடியாக எடுத்தாளப்படாததால் அவை விரிவாகக் கையாளப்படவில்லை. காளிதாசர் காலத்திலிருந்துதான் புது இலக்கிய முறைகள் அதிக அளவில் தெற்கத்திய மரபிலிருந்து எடுத்தாளப்பட்டிருக்கின்றன. காளிதாசர் தன் இலக்கியங்களில் திராவிட மரபு, ஆரிய மரபு ஆகிய இரண்டையும் கலந்து ஒரு புது மரபைத் தன் கற்பனைத் திறத்தால் உருவாக்கிக் காட்டியிருக்கிறார். அவருக்குப் பின் வந்தவர்கள் காளிதாசர் கண்ட வெற்றியைக் காணமுடியவில்லை அவர்கள் படைத்த இலக்கியங்கள் சுவையாக இருந்தாலும் கவிதை நடை காளிதாசர் நடை அளவுக்குச் சிறப்புப் பெறவில்லை என்றே கூற வேண்டும். காளிதாசர் நடை பிற்காலத்தில் தோன்றிய இந்திய மொழி இலக்கியங்களுக்கு ஒரு முன்னோடியாக அமைந்தது. அவருக்குப்பின் சமற்கிருத இலக்கியம் வளர்ச்சி பெற்றாலும் வர வரக் கடினமாகி மரபுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்கும் நிலைக்குப் போய் நீடிக்காமல் போய்விட்டது.

காளிதாசருக்குப் பிறகு வந்த சமற்கிருதப் புலவர்களுள் சிறந்தவர் பாகவதப் புராணத்தின் பெயர் தெரியாத ஆசிரியராவார். அவர் தமிழ் விட்ணு அடியார்களின் மரபைத் தழுவி எழுதியதால் வெற்றி பெற்றார் என்று நம்புவதற்கிடமுண்டு. காளிதாசருக்குப் பின் வந்த இந்திய இலக்கியங்களில் சிறந்தது வேறு எந்த இந்திய மொழியிலும் வரவில்லை. தமிழில்தான் வந்திருக்கின்றன. சிலப்பதிகாரம் சீவகசிந்தாமணி கம்பராமாயணம் போன்றவை தமிழ் மொழியின் இலக்கிய வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டுகளாகும். கம்பராமாயணம் ஆரியக் கதையானாலும், தென்னிந்திய மரபில் எழுதப்பட்டு மூல நூலைவிடப் பன்மடங்குச் சிறப்புப் பெறுகிறது. மகாபாரதமும் தமிழ் மரபில் எழுதப்பட்டிருக்கிறது. இவைகளை எல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கும்போது தமிழ் இலக்கிய மரபு வடமொழி இலக்கிய மரபிலிருந்து வந்ததல்ல என்பது தெளிவாகிறது. □



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



TRADUCTION: L. GASCA

## கீழல்லார் கீழல்லவர்!

வாரத்துக் கொருநாள் என்று
வருகின்ற ஞாயி றன்றுளம்
ஊருக்குள் தெருஓ ரத்தில்
உதித்திடும் பரப்பங் காடி
பாருக்குள் கிடைக்கும் யாவும்
படைக்குமோர் சிறப்பங் காடி!
நேரத்தைப் பார்த்தி டாமல்
நெரிபடும் மக்கள் ஆங்கே!

கடைவிரித் திரும ருங்கும்
கண்படு வணிகர் கூட்டத்(து)
இடைஒரு சிறுவன் கூவி
எழிலுறு நன்ம ணப்பூ
மிடைதரு செண்டொன் றுக்கு
விலை இரண்டுருபா என்றே
நடைவிரித் துக்கொண் டேபுன்
னகையுடன் என்னைப் பார்த்தான்!

நேரிய பார்வை! நெற்றி
நேர்படும் முடிச் சுருள்கள்!
கூரிய மூக்கு! கையில்
கூடை! அக் கூடையுள்ளே
சீரிய பன்மணப் பூச்
செண்டுகள்! மற்றோர் கையில்
ஓரிரண் டுருபாய் கொண்ட
ஒருநீண்ட துணிப்பை கண்டேன்.

கள்ளமே இல்லா அந்தக்
கருவிழிச் சிறுவன் மீதுஎன்
உள்ளமே பறிகொ டுத்தேன்;
உருகிய தென்றன் நெஞ்சம்!
பள்ளியில் படிக்கப் போகும்
பருவத்தில் வீணே இந்தப்
பிள்ளையைச் செண்டு விற்றுப்
பிழைத்திடச் செய்யும் பெற்றோர்,

யாரெனத் தெரிந்து கொள்ள
யானவன் பக்கஞ் சென்றேன்!
"பேரென்ன? எந்த ஊர்நீ?
பெற்றோர்கள் உண்டா தம்பீ?"
கூறெனக் கேட்டேன்! அந்தோ!
கொடுமை! அப் பவழ வாயால்
"பாரெலாம் என்னூர்! என்னைப்
பார்ப்பவர் உறவோர் என்றான்!

## Ne sont pas inférieurs ceux qui se distinguent !

Le dimanche, jour qui vient une fois
Par semaine,
S'ouvre dans notre ville la foire
Aux étalages sur les côtés de la rue.
Un marché spécial qui offre
Tout ce qui s'arrête au monde.
Les gens se pressent là-bas,
Sans se soucier du temps.

Parmi les forains qui se voyaient
Devant les étalages sur les deux côtés,
Un petit garçon criait,
Vendant de belles fleurs odoriférantes,
Assemblées en bouquets,
Au prix de deux roupies la pièce.
Il me regardait avec un sourire
Tout en marchant.

Un regard droit ! Des boucles de cheveux
Tombant droit sur le front !
Un nez pointu ! un panier à la main !
Et là-dedans, de beaux bouquets
De fleurs aux parfums variés.
A l'autre main je voyais
Un sac de toile au format long
Contenant une ou deux roupies.

Ce jeune aux yeux tout noirs,
Nullement sournois,
M'impressionna beaucoup.
Mon cœur s'attendrit sur son sort.
A l'âge où il devait aller
A l'école,
Ses parents le faisaient vivre
Inutilement à vendre les fleurs.

Je voulus savoir qui ils étaient.
Je me dirigeai vers lui.
–« Ton nom ? De quel endroit tu viens ?
Est-ce que tu as tes parents ?
Dis-le moi, mon petit ! »
Hélas ! Sa bouche de corail répondit :
« Le monde est ma patrie.
Ceux qui me voient sont mes parents.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மின்னல்என் தந்தை கண்ணை
விழுங்கிய(து) ஒருபேருந்துஎன்
அன்னையின் காலிரண்டை
அழித்தது! வறிய ரானோம்!
உண்ணவோர் உணவும் இல்லை;
உறையுளும் இலை! ஓர் வீட்டின்
திண்ணையில் படுத்து றங்கிச்
செயலற்றுக் கிடந்தோம் சின்னாள்!

தோள்மீது காலில் லாத
துணைவியைச் சுமந்து கொண்டு
நாள்முற்றும் திரிந்தார் என்றன்
நலிவுற்ற தந்தை! எம்மைத்
தேள்கொட்டி னாற்போல் பேசித்
தெருத்தினர் பணம் படைத்தோர்!
கேள்கிளை யாவும் செல்வம்
கிடைத்திடில் கிடைக்கும் பாரில்!

இரக்கமோ டெம்மை நோக்கி
இருக்கஓர் திண்ணை நல்கிப்
புரக்கவோ துணிந்த அந்த
புண்ணியர் தமது தோட்டத்(து)
இருக்கிற மலரை நாங்கள்
எடுத்திட உடன்பட் டார்கள்!
பொறுப்புடன் அன்னை செய்த
பூச்செண்டே இவைகள் என்றான்.

பாமணம் பரப்பி இந்தப்
பாரினுக் கறிவு சேர்க்கும்
நாமகள் சிலைஎம் வீட்டின்
நடுவினில் அமைந்தி ருந்தோம்;
பூமணம் பரப்பு கின்ற
பொலிவுசேர் செண்டு கொண்(டு) அக்
காமரும் சிலைக்கை வைக்கக்
கருதினேன்; அருகில் சென்றேன்!

அந்தச் சிறுவன் அங்கையில்
ஐந்து ரூபாய் நாணயத்தைத்
தந்தே இரண்டு செண்டுகளைத்
தரமாய் எடுத்து நடைவிரித்தேன்!
ஐந்தே நொடியில் அச்சிறுவன்
ஐயா! பெரியீர்! எனக்கூவி
வந்தான் மருங்கில்! "மீதியினை
வாங்கிச் செல்வீர் எனஉரைத்தே,

ஒருரூபாய் நாண யத்தை
உடனேஎன் கையில் வைத்தான்!
"பெரிதல்ல தம்பீ! நீயே
பெற்றுக்கொள் என்றேன்; ஆனால்,
சிறிதேதான் எனினும் இந்தச்
சில்லறைக் காசைப் பட்டால்,
பெரிதான திருடன் என்ற
பெயரன்றோ சேரும்" என்றான்!

Un éclair dévora les yeux
De mon père.
Un autobus brisa les deux jambes
De ma mère.
Nous devînmes des déshérités,
Sans nourriture ni logements.
Nous dormions sur le poyal d'une maison,
Ne sachant que faire !

Portant sur ses épaules ma compagne
Sans jambes,
Mon père aveugle errait
Tout le jour.
Les nantis nous chassaient avec des paroles
Aussi venimeuses que le dard du scorpion.
Ici-bas on a des parents et amis
Seulement quand on acquiert la richesse.

Nous regardant avec pitié,
Il octroya comme demeure son poyal.
Décidé à nous sauver,
Le même homme généreux
Nous donna la permission
De cueillir les fleurs de son jardin.
Les bouquets que voici sont assemblés
Avec patience par ma mère. »

Une statue de Sarasvadi,
La déesse qui répand sur cette terre
La poésie et l'intelligence,
Etait installée dans notre maison.
Je voulus orner cette belle statue
En y portant le bouquet de fleurs
Qui exhalait un parfum délicieux.
Je m'approchai du petit vendeur.

Dans le creux de sa main
Je mis une pièce de cinq roupies,
Je choisis deux bons bouquets
Et je poursuivis mon chemins.
Soudain le garçon accourut criant :
Monsieur ! vous, la grande personne !
-« Veuillez reprendre, dit-il, Le reliquat ! »

Aussitôt il mit dans ma main
Une pièce d'une roupie.
-« Ca ne fait rien, mon petit !
Garde la monnaie ! », dis-je.
-« Quoique ce soit une petite somme,
Si je désirais avoir cette monnaie-là
C'est le grand nom de voleur
Qui me serait décerné ! », répondit-il.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிறர்பொருள் நச்சி வாழும்
　　பேதையர் மலியும் நாட்டில்
அறவழிப் பொருளைத் தேடும்
　　அறியாத சிறுவன் நெஞ்சில்
நெறிவளர் நேர்மைப் பண்பை
　　நிலைபெறச் செய்த பெற்றோர்
நிறைதனை எண்ணி எண்ணி
　　நெகிழ்ந்துபோ யிற்றேன் நெஞ்சம்!

கூழருந்த வழியு மின்றிக்
　　குந்தஒரு குடிசை இன்றிப்
பாழடைந்த கண்ணி னோடும்
　　பழுதடைந்த காலி னோடும்
வாழுகின்ற ஏழை மாந்தர்
　　வறுமையிலும் செம்மை கண்டு
"கீழிருந்தும் கீழல் லாதார்
　　கீழல்லர்" எனத் தெரிந்தேன்!

Dans ce pays rempli d'infâmes
Qui vivent en volant les biens d'autrui,
Les parents avaient fait pénétrer
Dans le cœur du petit innocent
La grande vertu qu'est l'honnêteté
Pour qu'il gagne sa vie dans la droiture.
De penser sans cesse à leur probité
Mon cœur se réjouit davantage !

Ces pauvres gens qui vivent,
Sans moyen de boire la bouillie,
Sans chaumière pour y loger,
Avec les yeux endommagés
Et les jambes amputées,
Sont cependant heureux dans leur misère !
Je compris qu'ils ne sont pas inférieurs
Ceux qui se distinguent dans une position basse

************************************************************

# தமிழிருக்க...

பார்க்காத விழிகளினால் பயனும் இல்லை!
　　பழகாத நெஞ்சத்தால் பலனும் இல்லை!
வேர்க்காத உடலினிலே நோயின் தொல்லை!
　　விளையாட்டில் மனம்புகுந்தால் ஏதாம் எல்லை!
போர்க்காலம் வந்தாலும் கவலை யில்லை!
　　பூந்தமிழை மறந்திட்டால் வாழ்வே யில்லை
தேர்க்கோலம் வந்திட்ட மறவர் கூட்டம்
　　திறமிழந்து தெருவெல்லாம் திரிய லாமோ?

நாமினிய நம்தமிழை மறந்தால், நம்தாய்
　　நற்றமிழும் நலங்குன்றிச் சிதறிப் போகும்!
காம, மது செய்கையினால் கருத்(து) இழந்து
　　காலத்தைக் கழிப்பதனால் சிறுமை மேவும்!
தேமதுரத் தமிழோசை பரவச் செய்யும்
　　சீர்மேவும் பணியினிலே முதன்மை கொள்வோம்!
பூமியிலே எந்நாட்டில் வாழ்ந்திட் டாலும்
　　புகழ்மேவும் செந்தமிழை மறக்க லாமோ?

**கவிஞர் தே. சனார்த்தனன்,** முதலியார்பேட்டை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாட்டு இயற்றப் பயில்வோம்-12

****************************************************

## முனைவர் இரா. திருமுருகனார்

### நேரிசை ஆசிரியப்பா

சோலை நடுவில் சொக்குப் பச்சைப்
பட்டுடை பூண்டு படர்ந்து கிடந்து
குலக்கென்று சிரித்த முல்லை
மலர்க்கொடி கண்டேன் மகிழ்ச்சிகொண் டேனே.

– பாவேந்தர்

இப்பாடலில் குலக்கென்று என்று மூவசைச்சீர் வந்துள்ளது. இப்படி அருகி வருவதுண்டு. முதல் இரண்டடியில் எதுகையும் அமையவில்லை தொடை, சீர் முதலியவற்றில் இப்படிச் சிறிது நெகிழ்ச்சி காட்டலாம். பாடலில் பொருளுக்கும் அதைச் சொல்லும் முறைக்கும் தான் முதலிடம்.

ஒல்காப் பெருமைத் தொல்காப் பியமும்,
உளங்கூ றுரையாம் இளம்பூ ரணமும்,
ஆனாப் புகழ்கொள் சேன வரையமும்,
உச்சிமேல் புலவர்கொள் நச்சினார்க் கினியமும்,
ஆரா இனிமைப் பேரா சிரியமும்,
யாப்பருங் கலமாம் மாப்பெரு நூலும்,
நன்னூல் என்னும் பொன்னூல் தெளிவும்,
இலக்கணம் தொகுத்த இலக்கணக் கொத்தும்
கல்லார் தமிழியல் கல்லார்
என்று கூறலாம் மன்றெல்லாம் சென்றே!

இந்த நேரிசை ஆசிரியப்பாவில் இரண்டடி தோறும் அடி எதுகை அமையவில்லை ஆனால் ஒவ்வோர் அடியிலும் 1 , 3 ஆம் சீர்களில் எதுகை ஒன்றி வருகிறது இப்படி அமைப்பதும் ஒருமுறை. இந்த ஓசை மிகவும் மிடுக்காகவும், எடுப்பாகவும் இருக்கும். இதுபோல் வரும் இன்னொரு பாடற் பகுதியைக் காண்க.

விழவாற்றுப் படுத்த கழிபெரு வீதியில்
பொன்நாண் கோத்த நன்மணிக் கோவை
அய்யவி அப்பிய நெய்யணி முச்சி
மயிர்ப்புறம் சுற்றிய கயிற்கடை முக்காழ்
பொலம்பிறைச் சென்னி நலம்பெறத் தாழச்
செவ்வாய்க் குதலை மெய்பெறா மழலை
சிந்துபு சீன்னீர் ஐம்படை நனைப்ப
அற்றம் காவாச் சுற்றுடைப் பூந்துகில்
தொடுத்தமணிக் கோவை உடுப்பொடு துயல்வரத்
தளர்நடை தாங்காக் கிளர்பூண் புதல்வரை....

–மணிமேகலை, மலர்வனம்புக்க காதை

**நினைவில் நிறுத்துக :**

இரண்டடி தோறும் எதுகை அமையும் ஆசிரியப்பாக்களில் அடிதோறும் 1, 3 ஆம் சீர்களில் மோனை அமைய வேண்டும். அடிதோறும் 1, 3 ஆம் சீர்களில் எதுகை அமையும் ஆசிரியப்பாக்களில் இரண்டடிதோறும் எதுகையோ அடிதோறும் மோனையோ அமைய வேண்டுவதில்லை.

படித்துப் பார்க்கச் சில நேரிசை ஆசிரியப்பாக்கள்:

பைதலம் அல்லேம் பாண பணைத்தோள்
ஐதமைந் தகன்ற வல்கு
னெய்தலங் கண்ணியை நேர்தனாம் பெறினே!

ஐங்குறு நூறு–135

இதுவென் பாவைக் கினியநன் பாவை
இதுவென் பைங்கிளி எடுத்த பைங்கிளி
இதுவென் பூவைக் கினியசொற் பூவையென்
றலமரு நோக்கின் நலம்வரு சுடர்நுதல்
காண்தொறும் காண்தொறும் கலங்க
நீங்கின ளோவென் பூங்க ணோளே?

ஐங்குறு நூறு–375

முகைமுற் றினவே முல்லை முல்லையொடு
நகைமுற் றினவே தண்கார் வியன்புனம்
வாலிழை நெகிழ்த் தோர்வாரார்
மாவைவந் தன்றென் மாண்நலம் குறித்தே

குறுந்தொகை–188

அடிதோறும் 1, 3 ஆம் சீர்களில் எதுகை அமைந்த நேரிசை ஆசிரியப்பாக்கள்

1. தன்னைப் பெற்ற அன்னையோ கையில்
ஓடெடுத் திரக்கிறாள் வீடுகள் தோறும்,
கடனுடை மகனோ குடமூக் கதனில்
கறவைக் கொடையினை முறையுடன்
ஏற்றோர் தம்மால் போற்றப் படுகிறான்
முதுமொழி இதுபொல் சிலரின்
வள்ளல் தன்மையும் கொள்ளப் படுமே!

(குடமூக்கு–கும்பகோணம், கறவை –பசு)

2. ஏமா றாதீர் ஏமா றாதீர்
கூழைக் குடிக்கும் ஏழை மக்களே,
பரிசுச் சீட்டென வரிசையாய் விற்பன
ஆசையைத் தூண்டி மோசம் செய்வன
ஏழையர் ஆசையில் பேழை நிரப்புவார்
செய்யும் சூழ்ச்சியில் ஐயோ
வீழ்ந்து விடாதீர் தாழ்ந்துபோ வீரே!

புலவர் அரங்க. நடராசன், புதுவை 13

3. கமழ்தமிழ் படித்த நமதூர்ப் புலவரே
உயர்வாய் நினைத்துப் பெயருக்கு முன்னர்
ஆங்கில எழுத்தைத் தாங்கி நிற்பதும்,
பெற்ற குழந்தைக்கும் உற்ற மனைக்கும்
வாங்கிச் சேர்க்கும் ஓங்கு பொருட்கும்
அயற்சொற் பெயரை மயலுற்று
வைப்பதும் நெஞ்சைத் தைப்பது போன்மே!

மு. இளங்கோவன், திருச்சிராப்பள்ளி–24

4. புகழுறு கடவுள் திகழும் கோவிலில்
வடமொழி யால்வழி படுதல் தேவையோ?
நற்றமி ழால்தொழல் குற்றம் ஆகுமோ?
விளங்கிடும் கடவுள் உளங்களிப் படையக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கருவறைக் குள்ளே ஒருதமிழ் மொழியே
இணங்கிடச் செய்தல் வணங்கும்
தமிழர் கடனே! தமிழர் கடனே!

பாவலர் முருகதாசன், முத்தியால்பேட்டை.

5. கற்கும் கல்வியை விற்கும் நாட்டில்
பெற்ற பொருளால் உற்றநற் கல்வியை
முற்றும் கற்றதாய் வெற்றிக் களிப்பில்
நற்பணி அடையவும் பொற்குவை ஈயும்
குற்றம் செய்வோர் முற்றிலும் நீங்கிக்
குறையிலாக் கல்வியை முறையுடன்
பெற்றிடும் நாள்தான் நற்றரு நாளே

புலவர் செ. இராமலிங்கன், பாரதிதாசன் நகர்.

6. செல்வம் இருந்திடின் எல்லாத் துறையிலும்
வெற்றியை எளிதில் பெற்றிட இயலும்!
இல்லார் ஒருவர் நல்லோ ராயினும்
செல்வரைப் போன்று செல்வதே இல்லை!
அறச்செயல் புரிவோர் சிறப்பதும் அரிதே!
பழியே யாயினும் இழிசெயல்
புரிவோர் முதல்வராம் பெரியதோர் வியப்பே

பாவலர் கோ. புகழேந்தி, முதலியார்பேட்டை.

7. கண்ணினை விற்றுக் கண்ணொளி பெற்றிடும்
அறியாத் தனத்தை அறிவென எண்ணி
ஆங்கிலக் கல்வியைப் பாங்குறக் கற்கிறார்,
தாய்த் தமிழ்க் கல்வியைச் சேய்கள் மறந்தால்
தமிழு மில்லை, தமிழனு மில்லை,
சிந்தனை யற்று மந்தியாய்
வீற்றிருந் தானே ஏற்றமு மின்றியே!

பாவலர் கருமதைத்தமிழாழன், ஓசூர்.

8. எங்கும் செந்தமிழ் பொங்கிப் பெருகிட
ஊக்கம் கொண்டே ஆக்கம் தேடுமின்
மொழியை இனத்தை வழியொடு பேணிடின்
நாட்டின் சீர்மை கேட்டினை எய்துமோ?
தாழ்வுளப் பான்மை வாழ்வில் பெறுவதால்
உயர்வெலாம் ஒடுங்கும், அயர்வோ,
எள்ளிச் சிரித்திடத் துள்ளுமால் பலவே!

பாவலர் அரிசிலந்துறையன், அம்பல்.

9. நம்மவர் இன்று நம்மை ஆள்வதால்,
ஏற்றத் தாழ்வுகள் மாற்றம் உற்றிடும்,
இழிந்த பண்புகள் அழிந்தொ ழிந்திடும்,
அன்பும் அறமும் தென்பொடு வளர்ந்திடும்,
செந்தமிழ்க் கல்வி, பைந்தமிழ்க் கலைகள்
நன்றீங் குயர்ந்திடும் என்றெலாம்
எண்ணியோர் மனத்தில் மண்வீழ்ந் ததுவே!

புலவர் சி. இராமலிங்கம், தவளக்குப்பம்.

10. செந்தமிழ் மொழியில் வந்தவர் மொழிகள்
இணைந்த நிலையை முனைந்து நீக்கிப்
பாக்கள் இயற்றும் ஆக்கம் தந்து
பிழையறத் தமிழை எழுதிடப் பயிற்றித்
திங்கள் ஒருமுறை எங்களை நாடும்
புதுவையில் தோன்றிய புதுமைத்
தெளிதமிழ் பரவி ஒளிமிகத் தருமே!

த. மன்றவாணன், சேலியமேடு.

(தொடரும்)

# வேண்டுதல்

மலரின் தேனைப்போன்று
வளரும் நம் காதல்
இனிக்க வேண்டும்!

எப்பொழுதும்
என்றன் நெஞ்சத்துள்
உன்றன் நினைவுகள்
மலர வேண்டும்!

கடல் நீரும், உப்பும்
கலந்துள்ளதுபோல் – நம்
உயிர்கள் கலந்து
மகிழ வேண்டும்!

வேண்டுவது நானாக
இருந்தாலும்
அருள்வது நீ தானே!

**- பாரீசு பார்த்தசாரதி**

# கண்கள் ஏங்குதடி

நெஞ்சத்தில் எழுதி வைத்த
நினைவுகள் வாழுமா?
அவனை எண்ணி – என்

(நெஞ்சத்தில்)

மாலை வேளையிலும்
மலர்ந்துள சோலையிலும்
அவனை எண்ணி
மயக்கம் வருகுதடி!– தோழி
மயக்கம் வருகுதடி!

(நெஞ்சத்தில்)

அல்லி மலர்ந்ததடி! – என்
ஆசை வளர்ந்ததடி!
கண்கள் ஏங்குதடி!
அவனை எண்ணி
என்னுளம் வீங்குதடி!

(நெஞ்சத்தில்)

பெண்ணிற்கே இது சாபமா?
பெரும் வேதனை தீருமா?

**- அப்பாவு**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பிரான்சு அதிபர் தேர்தல் ஒரு கண்ணோட்டம்

## பாரிசு பார்த்தசாரதி

மே 5 ஆம் நாள் நடைபெற்ற பிரான்சு அதிபர் தேர்தலில் 82 விழுக்காடுகள் வாக்குகளைப் பெற்று மீண்டும் பிரான்சு அதிபராகப் பதவி ஏற்றிருக்கிறார் **Jacques CHIRAC** அவர்கள். இதுவரை நடைபெற்ற பிரான்சு அதிபர் தேர்தலில் 82 விழுக்காடு வாக்குகளை வேறு யாரும் பெற்றதில்லை. இவரை எதிர்த்துப் போட்டியிட்ட **Jean-Marie LE PEN** அவர்கள் 18 விழுக்காடு வாக்குகளைப் பெற்றார்.

1965 ஆம் ஆண்டிலிருந்து சோசலிச கட்சியும்(இடது) டெமசிரே கட்சியும்(வலது) இரண்டாவது சுற்றுப் போட்டிக்கு வந்த நிலை மாறி, இந்த முறை நிறவெறியை ஆதரிக்கும் "லெ பேனின்" தேசிய முன்னனி கட்சி இரண்டாவது சுற்றுப் போட்டிக்கு வந்தது.

முதல் சுற்றில் போட்டியிட்ட பதினாறு வேட்பாளர்களில் 16 விழுக்காடு வாக்குகள் பெற்று மூன்றாம் இடத்திற்குத் தள்ளப்பட்ட சோசலிச கட்சி வேட்பாளர் பிரதமர் Lionel JOSPIN உட்பட பதினாறு வேட்பாளர்களும் சிராக்குக்கு வாக்கு அளித்ததால் 82 விழுக்காடு வாக்குகள் சிராக்குக்குக் கிடைத்தன. இந்த வெற்றியைச் சிராக்கின் தனிப்பட்ட வெற்றி என்று கூற முடியாது. நிறவெறியை எதிர்த்தும், சர்வதிகாரத்தை எதிர்த்தும், தன்னலக் காரர்களை எதிர்த்தும் அளிக்கப்பட்ட சுதந்திரத்தின் வெற்றி எனலாம்.

முதல் சுற்றிலும் இரண்டாவது சுற்றிலும் லெ பேன் அவர்களுக்கு, அவரின் ஆதரவாளர்கள் மட்டுமே வாக்களித்துள்ளனர்.

முதல் சுற்றில் சோசலிச சட்சி வேட்பாளர்கள் குறைவான வாக்குகள் பெற்றதற்குச் செய்தித் தாள்கள் கூறும் காரணங்கள்:

☐ அதிகமான வெளி நாட்டவர் முறையற்ற வழியில் பிரான்சுக்குள் நுழைந்து அரசிடம் உதவிகள் பெற்று வாழ்வதை இந்நாட்டு மக்கள் விரும்பவில்லை.

☐ வேலையில்லாத் திண்டாட்டம் பெருகுவது(முன் வாரம்வரை வேலையற்றோர் எண்ணிக்கை சுமார் 23 இலட்சம்)

☐ பொது மக்களுக்கும், பணியாளர்களுக்கும், காவல் துறையினருக்கும் பாதுகாப்பற்ற பதட்டநிலை.

☐ திருட்டு, வழிப்பறி, கொலை பெருகிக்கொண்டே செல்வது.

மேற்கூறிய காரணங்களை எல்லாம் சரி செய்ய முயற்சி எடுப்பேன் என்று உறுதி அளித்தே ழாக் சிராக் வெற்றி பெற்றார்.

37 ஆண்டுகளாகச் சோசலிச கட்சியில் பல பதவிகளில் இருந்தவரும், பிரதமருமான லியொனல் ழொச்பென் அவர்கள் அரசியலில் இருந்து விளகி, பிரதமர் பதவியை வேண்டாமெனச் சொல்லி விட்டார். அவர் தமது மந்திரி சபையையும் கலைத்துவிட்டார்.

வருகின்ற சூன் 9 ஆம் நாளும், 16 ஆம் நாளும் நடைபெற இருக்கும் பாராள மன்றத் தேர்தல் வரை இடைக்கால மந்திரி சபையைப் புதிய அதிபர் சிராக் அமைத்துள்ளார். டெமகிராட் லிபரல் கட்சியைச் சேர்ந்த "ழுதன் பியார் ராபரான் அவர்களைப் பிரதம மந்திரியாக நியமித்துள்ளார்.

புதிய மந்திரியாகப் பதவி ஏற்ற ராபாரான் மக்களுக்கு அறிமுகமில்லாதவராக இருந்தாலும் அரசியலில் பழைய மனிதர் எனலாம். சிராக்கின் தீவிர ஆதரவாளரான, 53 வயதை உடைய ராபாரான் அவர்கள் 26 வயதிலேயே கட்சியின் மாவட்டத் தலைவராக இருந்தவர்.

புதியதாக அமைக்கப்பட்டுள்ள மந்திரி சபையில் 2 மந்திரிகள் இதுவரை அறிவிக்கப்பட்டுள்ளனர். இச்சபையில் சிராக் கட்சியினர் (RPR) 11 நபர்களும், பிரான்சுவா பய்ரோ கட்சியினர் (VDF) 7 நபர்களும், அலன் மடேலேன் கட்சியினர் (DL) 4 நபர்களும் இடம் பெற்றுள்ளனர். புதிய மந்திரி சபையில் பெண் மந்திரிகள் இடம் பெற்றுள்ளனர். முதன் முறையாகப் பாதுகாப்பு மந்திரியாகச் சிராக் கட்சியின் தலைவி பதவி ஏற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

இரண்டாம் சுற்றில் பதிவான வாக்குகள்:

| | |
|---|---|
| மொத்த பதிவு: | 41191009 |
| வராதவர்கள்: | 83595512 – 20. 29 விழுக்காடு |
| செல்லாதவை: | 1764718 – 4. 28 விழுக்காடு |
| சிராக்: | 25540873 – 82. 21 விழுக்காடு |
| லெ பேன்: | 5525966 – 17.79 விழுக்காடு |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வைத்தியம் சொல்லடி

*********************************

## கவிஞர் கி. பாரதிதாசன்

பைத்தியம் நீங்கிட
வைத்தியம் சொல்லடி - அந்தப்
பாவலன் மேல்மனம்
வைத்துள காதலாம்

(பைத்தியம்)

கண்ணனைப் போலவே
கண்கவர் வண்ணனாம்! - உயர்
கம்பனைப் போலவே
காவிய மன்னனாம்!
என்னுளம் போலவே
என்றுமென் அன்பனாம்! - அவன்
இன்றமிழ் போலவே
ஈடிலா இன்பமாம்!

(வைத்தியம்)

ராமனை மிஞ்சிடும்
பேரெழில் உற்றவன்! - எழில்
ராதையைக் கொஞ்சிடும்
மந்திரம் கற்றவன்!
காமனை விஞ்சிடும்
காதலைத் தந்தவன்! - அந்தக்
கர்ணனைப் போல்கொடை
காத்திட வந்தவன்!

(வைத்தியம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்